# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1418/15 - 2005 නොවැම්බර් 09 වැනි බදාදා - 2005.11.09

*1418/15 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

அறிவித்தல்

*அதி மேதகு சனாதிபதி அவர்கள், 2005, யூலை 08 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட 1400/24 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டளை மூலம் 2005, யூன் 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த “அழகியற் கற்கைகள் நிறுவகத்தினை” இரத்துச் செய்து “கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக மொன்றினை” 2005 யூலை 01 இல் இருந்து ஸ்தாபித்துள்ளார் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.*

*2005, யூன் 30 அன்றில் களனிப் பல்லைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்புகளுக்கென அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் தம்மைப் பதிவு செய்துள்ள மாணவர்கள் 2005, யூலை 01 இல் இருந்து “கட்புல அரங்கேற்றக் கலைகள்” பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்களுக்கு தம்மை முறையாகப் பதிவு செய்து கொண்டவர்களாகக் கருதப்படுவர்.*

*2003/ 2004 ஆம் ஆண்டின் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் “அழகியற் கற்கைகள்” நிறுவகத்தின் அனுமதிக்காக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாணவர்கள், “கட்புல அரங்கேற்றக் கலைகள்” பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்களுக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளாகக் கருதப்படுவர்.*

*திஸ்ஸ நந்தசேன,*
*செயலாளர்.*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,*
*இல. 20, வாட் இடம்,*
*கொழும்பு 07.*
*2005, செத்தெம்பர் 01.*

*11- 460*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.